# TNPSC GROUP I / II – PRELIMINARY
# INDIAN POLITY - WORKSHEET

# தேர்தல்

- தேர்தல் என்பது மக்கள் தங்கள் பிரதிநிதிகளை சீரான இடைவெளியில் தேர்ந்தெடுக்கும் ஒரு முறையாகும். **தேர்தலியல் (Psephology)** என்பது தேர்தல்கள் தொடர்பான முடிவுகள் மற்றும் பிற புள்ளிவிவரங்களின் ஆய்வு ஆகும்.

- **முதலில் நிலையை கடந்து செல்லுதல் (FPTP)** என்பது இந்தியாவில் பின்பற்றப்படும் பெரும்பான்மை தேர்தல் முறையின் எளிய வடிவமாகும்.

**தேர்தல் முறை**

அரசியலமைப்பின் 15 வது பகுதி சரத்து 324 முதல் 329 வரை நமது நாட்டின் தேர்தல் நடைமுறை பற்றி குறிப்பிடுகிறது

## தேர்தல் தொடர்பான விதிகள்

| பிரிவு | பொருள் |
|---|---|
| சரத்து 324 | தேர்தல் ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் பணிகள் பற்றியது |
| சரத்து 325 | எந்தவொரு நபரும் மதம் இனம் சாதி மற்றும் பாலினம் அடிப்படையில் சிறப்பு வாக்காளர் தகுதியை பெற முடியாது |
| சரத்து 326 | வயது வந்தோர்க்கு வாக்குரிமை பற்றியது |
| சரத்து 327 | பாராளுமன்ற தேர்தலுக்கான பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் |
| சரத்து 328 | சட்டமன்ற தேர்தலுக்கான மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் |
| சரத்து 329 | தேர்தல் நடவடிக்கைகளில் நீதிமன்றத்தின் குறுக்கீடுகளை தடுத்தல் |
| சரத்து 329(A) | நீக்கப்பட்டது |

## தேர்தல் இயந்திரம் ( Election Machinery)

### 1. தேர்தல் ஆணையம்

- பிரிவு 324 தேர்தல் தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்குகிறது.
- தலைமைத் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிற தேர்தல் ஆணையாளர்களை குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்

### 2. தலைமைத் தேர்தல் அலுவலர் (Chief Electoral officer CEO)

- ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஒன்றியப் பிரதேசத்தில் தலைமைத் தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்படுகிறார்
- தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கிறார்.
- மாநிலத்தைக் கலந்தாலோசித்து தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்படுகிறார்

### 3. மாவட்ட தேர்தல் அலுவலர் (District Election officer)

- மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கிறார்
- மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத் தேர்தல் அலுவலராகச் செயல்படுகிறார்

### 4. தேர்தல் அலுவலர் (Returning Officer)

- ஒரு தொகுதியின் சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற தேர்தலை நடத்தும் அலுவலராக உள்ளார்
- இவருக்கு உதவி செய்ய உதவி தேர்தல் அலுவலர்களும் உண்டு
- வேட்புமனு பெறுவது பரிசீலனை செய்வது ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது போன்ற பணிகளைச் செய்கிறார்

### 5. வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்யும் அலுவலர் (Electoral Registration Officer)

- வாக்காளர் பெயர் பட்டியலை தயாரிக்கும் பணியில் ஈடுபடுகிறார்.
- மாநில அரசைக் கலந்தாலோசித்து தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்படுகிறார்

### 6. வாக்குசாவடி தலைமை அலுவலர் (Presiding Officer)

- தேர்தல் நாளன்று வாக்குச் சாவடியில் தேர்தல் நடத்தும் பணிகளை மேற்கொள்கிறார்
- இவருக்கு உதவி செய்ய வாக்குசாவடி (Polling Officers) அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்

### 7. வாக்குசாவடி நிலை அதிகாரி

- BLO என்பவர் அரசு/அரை-அரசு அதிகாரி ஆவார் உள்ளூர் வாக்காளர்களை நன்கு அறிந்தவர் மற்றும் பெரும்பாலும் அதே வாக்குச் சாவடியில் உள்ள வாக்காளர் ஆவார் இவர், தகவல்களை பெறுதல் மற்றும் அவர் தனது உள்ளூர் வாக்களார் பட்டியலைப் புதுப்பிக்க உதவுகிறார்.

## தேர்தல் ஆணையத்தின் அதிகாரப் படிநிலைகள்

தலைமை தேர்தல் ஆணையர் (ECI)
↓
தேர்தல் ஆணையர்கள் (CE)
↓
தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO)
↓
மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO)
↓
தேர்தல் நடத்தும் அலுவலர்(RO)
↓
வாக்காளர் பதிவு அலுவலர்(ERO)
↓
வாக்குசாவடி தலைமை அலுவலர் (PO)
↓
தேர்தல் பார்வையாளர்கள் (EO) மற்றும் நுண் பார்வையாளர்கள்
↓
வாக்கு சாவடி நிலைய அதிகாரி (BLO)

## பார்வயைாளர்கள் (Observers)

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலின்போது தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்படுகின்றனர்

1. **பொதுப் பார்வையாளர்கள் (General Observers)**

- தேர்தலை அமைதியாக நடத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் பொது பார்வையாளர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**2. செலவினப் பார்வையாளர்கள் (Expenditure Observers)**

- வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காள நியமனம் செய்யப்படுகின்றனர்
- இவர்களுக்கு உதவி செய்ய உதவி செலவினப் பார்வையாளர்களும் நியமனம் செய்யப்படுகின்றனர்
- வாக்களிப்பதில் எந்தத் தூண்டுதலும் இல்லை என்பதை உறுதி செய்கின்றனர்

**3. காவல் பார்வையாளர்கள் (Police Observers )**

- இந்திய காவல் பணியைச் (I.P.S) சேர்ந்த அலுவலர்கள் காவல் பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்
- படைகளை களமிறக்குதல், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரித்தல் போன்றவற்றில் மாவட்ட நிர்வாகத்திற்குத் துணை புரிகின்றனர்

4. **நுண் பார்வையாளர்கள் (Micro Observers)**

- வாக்களிக்கும் நாளன்று பிரச்சனைக்குரிய வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பதைக் தொடக்கம் முதல் இறுதி வரை கண்காணிக்கின்றனர்.
- தேர்தல் நடைமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்துப் பொதுப் பார்வையாளர்களுக்கு அறிக்கை அளிக்கின்றனர்.

பொதுவாக மத்திய அரசு உழியர்கள் மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் நுண் பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர்

| பொதுதேர்தல் நடைபெற்ற ஆண்டுகள் | தொகுதிகள் | வெற்றி பெற்ற கட்சிகள் |
|---|---|---|
| முதல் தேர்தல் (1952) | 489 | காங்கிரஸ் 364 கம்யுனிஸ்ட் 16 பொதுவுடைமை 12 கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி 9 ஜனசங்க 3 |
| இரண்டாவது தேர்தல்(1957) | 494 | காங்கிரஸ் 371 கம்யுனிஸ்ட் 27 பிரஜா சோசலிஸ்ட் கட்சி 19 ஜன சங்கம் 4 |
| 17வது பொது தேர்தல் (2019) | 543 | பாரதிய ஜனதா கட்சி 303 காங்கிரஸ் கட்சி 52 திமுக 23 திரிணாமுல் காங்கிரஸ் 22, YSR காங்கிரஸ் 22, சிவசேனா 18. JD (U) 16, BJD 12, BSP 10, TRS 9, LJP 6, NCP 5, SP 5. |

## தேர்தல் ஆணையம்

- தேர்தல் ஆணையம் அகில இந்திய அளவில் சுதந்திரமாகச் செயல்படும் ஒரு அமைப்பாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் **324 ஆவது சரத்து** தேர்தல் ஆணையம் பற்றிக் குறிப்பிடுகிறது. குடியரசுத்தலைவர் தேர்தல் ஆணையத்தை அமைக்கிறார்.

- நாடாளுமன்றம், மாநில சட்டமன்றங்கள், இந்திய குடியரசுத் தலைவர் அலுவலகம் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் அலுவலகம் ஆகியவற்றுக்கான தேர்தல்களை மேற்பார்வையிடுதல், வழிநடத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் அதிகாரம் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையதின் தலைமையகம் புது தில்லியில் **(நிர்வச்சன் சதன்)** அமைந்துள்ளது.

- ❖ இந்திய தலைமை தேர்தல் ஆணையர் : ஞானேஷ் குமார்
- ❖ இந்திய தேர்தல் ஆணையர்கள் : 1. Dr. சுக்பீர் சிங் சந்து 2. Dr. விவேக் ஜோஷி
- ❖ முதல் இந்திய தலைமை தேர்தல் ஆணையர்: சுகுமார்சென் (1950 – 1958)
- ❖ முதல் இந்திய பெண் தலைமை தேர்தல் ஆணையர் : V. S ராமா தேவி

## தேர்தல் ஆணையத்தின் அமைப்பு

தற்போதைய அமைப்பு = ஒரு தலைமை தேர்தல் ஆணையர் + இரண்டு தேர்தல் ஆணையர்

தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) மற்றும் தேர்தல் ஆணையர்களை (ECS) நியமிக்க பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்தது.

- தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் ஆகியோரின் பதவிக் காலம், பணி நிபந்தனைகள் ஆகியவற்றை குடியரசுத் தலைவரே தீர்மானிக்கிறார்.

## பதவிக்காலம்

- ஆணையர்களின் பதவி காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை. இவர்கள் எப்போது வேண்டுமாயினும் பதவி விலகலாம் அல்லது குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

## அதிகாரங்களும் பணிகளும்:

1. பாராளுமன்றத்தின் தொகுதி சீரமைப்பு ஆணைய சட்டத்தின் அடிப்படையில் நாடு முழுவதும் உள்ள தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை தீர்மானித்தல்.

2. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து, அவ்வப்போது திருத்தம் செய்து, தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களையும் பதிவு செய்தல்.

3. தேர்தல் தேதிகள் மற்றும் அட்டவணைகளை அறிவித்தல் மற்றும் வேட்பு மனுக்களை பரிசீலித்தல்.

4. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்து, தேர்தல் சின்னங்களை ஒதுக்குத்தல்.

5. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது மற்றும் அவர்களுக்கு தேர்தல் சின்னங்களை ஒதுக்குவது தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான நீதிமன்றமாகச் செயல்படுவது.

6. தேர்தல் சமயத்தில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நடத்தை விதிகளை நிர்ணயித்தல்.

7. பாராளுமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம் தொடர்பான விவகாரங்களில் குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை வழங்குதல்.

8. மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கம் தொடர்பான விவகாரங்களில் மாநில ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்.

9. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் தேர்தல் இயந்திரங்களை மேற்பார்வை செய்தல்.

10. குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் ஒரு மாநிலத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தோ அல்லது மேலும் ஒரு வருடத்திற்கு குடியரசுத்தலைவர் ஆட்சியை நீட்டிப்பது குறித்தோ குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை வழங்குதல்.

பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்கள் மற்றும் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை மூன்று வகைகளாக வகைப்படுத்தலாம்.

1. நிர்வாகம் 2. ஆலோசனை 3. நீதிமுறை-சார்புடையவை

- ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தின் பணிகளைச் செய்ய இதற்கு அந்தந்த மாநிலங்களை கலந்தாலோசித்து ஒரு முதன்மை தேர்தல் அதிகாரியை இந்திய தேர்தல் ஆணையர் நியமிப்பார் அவர்கள் மாநிலங்களில் தேர்தல் நடத்த நிலையான தேர்தல் அதிகாரியாகவும், அமைப்பாகவும் செயல்படுவார்கள்.

## தலைமைத் தேர்தல் ஆணையர்கள்

| எண் | பெயர் | பதவியேற்ற தினம் | பணி நிறைவடைந்த தினம் |
|---|---|---|---|
| 1. | சுகுமார் சென் | 21 மார்ச் 1950 | 19 டிசம்பர் 1958 |
| 2. | கல்யாண் சுதந்தரம் | 20 டிசம்பர் 1988 | 30 செப்டம்பர் 1967 |
| 3. | S.P சென் வர்மா | 1 அக்டோபர் 1967 | 30 செப்டம்பர் 1972 |
| 4. | நாகேந்திர சிங் | 10 அக்டோபர் 1972 | 6 பிப்ரவரி 1973 |
| 5. | T. சுவாமிநாதன் | 7 பிப்ரவரி 1973 | 17 ஜீன் 1977 |
| 6. | S.L. சாக்தர் | 18 ஜீன் 1977 | 17 ஜுன் 1982 |
| 7. | R.K. திரிவேதி | 18 ஜீன் 1982 | 31 டிசம்பர் 1985 |
| 8. | R.V.S. பெரி சாஸ்திரி | 1 ஜனவரி 1986 | 25 நவம்பர் 1990 |
| 9. | V.S. ராமாதேவி | 26 நவம்பர் 1990 | 1 டிசம்பர் 1990 |
| 10. | T.N. சேஷன் | 12 டிசம்பர் 1990 | 11 டிசம்பர் 1996 |

| | | | |
|---|---|---|---|
| 11. | M.S. கில் | 12 டிசம்பர் 1996 | 13 ஜுன் 2001 |
| 12. | J.M. லிங்டொஹ் | 14 ஜீன் 2001 | 7 பிப்ரவரி 2004 |
| 13. | T.S. கிருஷ்ணமூர்த்தி | 8 பிப்ரவரி 2004 | 15 மே 2005 |
| 14. | B.B. தண்டொன் | 16 மே 2005 | 29 ஜீன் 2006 |
| 15. | N. கோபாலஸ்வாமி | 30 ஜீன் 2006 | 20 ஏப்ரல் 2009 |
| 16. | நவீன் சாவ்லா | 21 ஏப்ரல் 2009 | 29 ஜீலை 2010 |
| 17. | S.Y. குரோஷி | 30 ஜீலை 2010 | 10 ஜுன் 2012 |
| 18. | V.S. சம்பத் | 11 ஜுன் 2012 | 15 ஜனவரி 2015 |
| 19. | H.S. பிரம்மா | 16 ஜுன் 2015 | 18 ஏப்ரல் 2015 |
| 20. | நசீம் சாய்தி | 19 ஏப்ரல் 2015 | 5 ஜுலை 2017 |
| 21 | அச்சல் குமார் ஜோதி | 6 ஜுலை 2017 | 22 ஜனவரி 2018 |
| 22 | ஓம் பிரகாஷ் ராவத் | 23 ஜனவரி 2018 | 1 டிசம்பர் 2018 |
| 23 | சுனில் அரோரா | 2 டிசம்பர் 2018 | 12 ஏப்ரல் 2021 |
| 24 | சுஷில் சந்திரா | 13 ஏப்ரல் 2021 | 14 மே 2022 |
| 25 | ராஜீவ் குமார் | 15 மே 2022 | 18 பிப்ரவரி 2025 |
| 26 | ஞானேஷ் குமார் | 19 பிப்ரவரி 2025 | 26 ஜனவரி 2029 |

**Original Question**

1. Arrange the following Chief Election Commissioners of India in chronological order:
   1. Sunil Arora　　2. Rajiv Kumar
   3. Navin Chawla　　4. Sushil Chandra
   **a. 3,1, 4, 1**　　b. 1,2,3, 4　　c. 4,3,2,1
   d. 1,2,4,3　　e. Answer not known
   பின்வரும் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.
   1. சுனில் அரோரா　　2. ராஜீவ் குமார்
   3. நவீன் சாவ்லா　　4. சுஷில் சந்திரா
   a. 3,1, 4, 1　　b. 1,2,3 4　　c. 4,3,2,1
   d. 1,2,4,3　　e. விடை தெரியவில்லை

## மாநிலத் தேர்தல் ஆணையம் (<u>STATE ELECTION COMMISSION)</u>

- **சரத்து 243-K மற்றும் 243-ZA** பஞ்சாயத்து மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு நியாயமான சுதந்திரமான தேர்தல் நடத்துவதை உறுதி செய்வதை வரையறுக்கிறது.

- பஞ்சாயத்துக்களுக்கான தேர்தலைக் கண்காணித்தல், உத்தரவிடுதல், கட்டுப்பாடு ஆகிய அதிகாரங்களுடன், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் உள்ளிட்ட அதிகாரங்களும் மாநில தேர்தல் ஆணையத்திடம் உள்ளது.

- **தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994** இன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் **ஜுலை 15, 1994** இல் தொடங்கப்பட்டது.

- இதன் தலைமையகம் சென்னையில் கோயம்பேடு ஆகும்.

- **டாக்டர் ஆர்.பழனிசாமி**, இ.ஆ.ப., தமிழகத்தின் தற்போதைய மாநில தேர்தல் ஆணையராக உள்ளார்.

**அமைப்பு:**

- பஞ்சாயத்து தேர்தல் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் மாநில சட்டசபை தீர்மானிக்கிறது.
- **ஆளுநரால்** நியமிக்கப்படும் தேர்தல் ஆணையரைக் கொண்ட மாநிலத் தேர்தல் ஆணையம் அமைப்பு உள்ளது.

**பதவிக்காலம் (தமிழ்நாடு)**

- மரிநலத் தேர்தல் ஆணையரின் பதவிக்காலம் 2 வருடங்கள், மீண்டும் அடுத்தமுறை தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்புகள் உண்டு.

## தேர்தல் தொடர்பான நாடாளுமன்ற சட்டங்கள்

பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான தேர்தலை சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்துவதற்கு அரசியலமைப்பு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றம் பின்வரும் சட்டங்களை இயற்றியுள்ளது

1. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951மற்றும் 1952

2. எல்லை நிர்ணய ஆணைய சட்டம் 1952

3. குடியரசுதலைவர் மற்றும் துணை குடியரசுத்தலைவர் தேர்தல் சட்டம் 1952 ( நடைமுறை 1997)

**மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950**

- அரசியலமைப்பு சட்ட பிரிவுகள் 81 மற்றும் 170 வது பிரிவு ஆகியவை நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற பேரவைகளில் அதிகபட்ச இடங்கள் மற்றும் இருக்கைகளை ஒதுக்குவதில் சில கொள்கைகளை வகுத்துள்ளது

- அரசியலமைப்பு சட்டத்தின் 171 வது பிரிவு ஒரு மாநிலத்தின் சட்ட மேலவையில் அதிகபட்ச மற்றும் குறைநதபட்ச இடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.

- மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1950 மக்களவையிலும் மற்றும் சட்டபேரவையிலும் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக இயற்றப்பட்டது

1. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் உள்ள தொகுதி ஒதுக்கீடு
2. தொகுதிகளின் எல்லைகளை சீரமைத்தல்
3. வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
4. வாக்காளர் தகுதிகள்
5. தொகுதிகள் ஒதுக்கீடு

## மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951

இந்திய நாடாளுமன்றம் மற்றும் ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றத்தின் அவை அல்லது அவைகளுக்குத் தேர்தலை நடத்துதல், அந்த அவைகளின் உறுப்பினர்களுக்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை நிர்ணயித்தல், தேர்தல்களின் போது ஊழல் நடைமுறைகள் மற்றும் அது தொடர்பான பிற குற்றங்கள் தொடர்பாக எழும் சந்தேகங்களின் முடிவு ஆகியவற்றின் விதிமுறைகளை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 வழங்குகிறது.

1. தேர்தல்களை நடத்துதல் (பிரிவு 14 மற்றும் 15)
2. தேர்தல்களை நடத்துவதற்கான நிர்வாக முகமை
3. கருத்துக்கணிப்புகள்
4. தேர்தல் குற்றங்கள்
5. தேர்தல் சர்ச்சைகள் மற்றும் அவற்றை தீர்த்தல்
6. இடைத்தேர்தல்கள்
7. அரசியல் கட்சிகளை பதிவு செய்தல்

## மக்கள் பிரதிநிதிகளை தகுதி நீக்கம் செய்தல் (Disqualification of Mp and MLS’s)

மக்கள் பிரநிதித்துவ சட்டம் 1951 மக்கள் பிரநிதிகளை தகுதி நீக்கம் செய்ய சில விதி முறைகளை உருவாகியுள்ளது

சட்டப் பிரிவு 8 (3) படி ஒரு எம்பி அல்லது எம்எல்ஏ வேறு ஏதேனும் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறைக்கு அனுப்பப்பட்டால், அவர் / அவள் விடுவிக்கப்பட்ட நேரத்தில் இருந்து 6 ஆண்டுகள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

1951 ஆம் ஆண்டின் RPA இன் பிரிவு 10 (A), வேட்பாளர் தனது தேர்தல் செலவுகளின் கணக்கை ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் சமர்ப்பிக்கத் தவறினால், தேர்தல் ஆணையம் ஒரு வேட்பாளரை தகுதி நீக்கம் செய்யலாம். 1951 இன் RPA இன் பிரிவு 77 (1) இன் படி ஒவ்வொரு வேட்பாளரும் தனது தேர்தல் செலவுகளுக்காக ஒரு தனி கணக்கை வைத்திருக்க வேண்டும்.

### மக்கள் பிரநிதித்துவ சட்டம் (1951) முக்கிய பிரிவுகள்

### பகுதி – I நாடாளுமன்ற உறுப்பினர் தகுதிகள்

- பிரிவு 3 - மாநிலங்களவை உறுப்பினருக்கான தகுதிகள்
- பிரிவு 4 – மக்களவை உறுப்பினருக்கான தகுதிகள்

### பகுதி – II மாநில சட்டமன்ற உறுப்பினருக்கான தகுதிகள்

- பிரிவு 5 முதல் பிரிவு 6

**பகுதி - III** - நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதிநீக்கம்

- ○ பிரிவு 8 முதல் பிரிவு 9 வரை

**பொதுத் தேர்தல் அறிவிப்பு**

- பிரிவு 12 முதல் பிரிவு 16 வரை

**பகுதி IV**
**அரசியல் கட்சிகளின் பதிவு**

- பிரிவு 29A - அரசியல் கட்சிகளாக சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் ஆணையத்தில் பதிவு செய்தல்.

**பகுதி V**
**தேர்தல் நடத்துதல்**

- பிரிவு 30 - வேட்புமனுத்தாக்கலுக்கு தேதிகள் நிர்ணயித்தல், முதலியன.
- பிரிவு 33A - தகவல் அறியும் உரிமை.

**வாக்குகளை எண்ணுதல்**

- பிரிவு 66 - முடிவுகளின் அறிவிப்பு.
- பிரிவு 67A - வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட தேதி.

**பகுதி VI**
**தேர்தல் தொடர்பான சர்ச்சைகள்**

- பிரிவு 80 - தேர்தல் மனுக்கள்

**பகுதி VII**
**ஊழல் நடைமுறைகள் மற்றும் தேர்தல் குற்றங்கள்**

- பிரிவு 123 - ஊழல் நடைமுறைகள்.

**எல்லை நிர்ணய சட்டம்**

தொகுதி மறுசீரமைப்பு, எல்லை நிர்ணயம் மற்றும் பிராந்திய தொகுதிகளின் இட ஒதுக்கீடு மற்றும் பிற தொடர்புடைய பகுதிகளுக்கு சட்ட இயற்ற எல்லை நிர்ணயம் ஆணைய சட்டம் நாடாளுமன்றத்திற்ககு அதிகாரம் வழங்குகிறது

- முதல் எல்லை நிர்ணய ஆணைய சட்டம், 1952
- இரண்டாவது எல்லை நிர்ணய ஆணையச் சட்டம், 1963
- மூன்றாவது எல்லை நிர்ணய சட்டம், 1973
- நான்காவது எல்லை நிர்ணய சட்டம் 2002, 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் நோக்கத்திற்காக எல்லை நிர்ணய ஆணையத்தை அமைக்க இயற்றப்பட்டது

APOLLO STUDY CENTRE

- இந்திய அரசியலமைப்பின் 82 மற்றும் 170 வது பிரிவுகள் 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்தையும் பிராந்தியத் தொகுதிகளாக (பாராளுமன்றத் தொகுதிகள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகள்) மறுசீரமைக்கவும் பிரிக்கவும் அதிகாரம் வழங்குகின்றன.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 330 மற்றும் 332 வது பிரிவுகள் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநிலங்களின் சட்டப் பேரவைகளில் பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை மறு நிர்ணயம் செய்ய அதிகாரம் வழங்குகிறது.

- 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் முந்தைய எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது

## தேர்தல்கள் தொடர்பான பிற சட்டங்கள்

- குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல் சட்டம், 1952, இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் அலுவலகங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான அல்லது அதனுடன் தொடர்புடைய சில விதிகளை ஒழுங்குபடுத்துகிறது.

## தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான குழுக்கள்:

1. **1974**ம் ஆண்டு ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களின் "மொத்த புரட்சி" காலத்தில் **டார்குண்டே குழு**வானது நியமிக்கப்பட்டது. 1975ம் ஆண்டு அதிகாரப்பூர்வமற்ற இந்த குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

2. தேர்தல் சீர்த்திருத்த குழு (தினேஷ் கோஸ்வாமி தலைமை) (1990)

3. குற்றம் மற்றும் அரசியல் இடையிலான வோஹ்ரா குழு (1993)

4. T.N. சேஷன் சீர்திருத்தங்கள் (1995)

5. 1998 ஆம் ஆண்டில், பாஜக-அரசு முன்னாள் உள்துறை அமைச்சரான இந்திரஜித் குப்தாவின் தலைமையில் தேர்தல்களுக்கு அரசு நிதியுதவி தொடர்பாக எட்டு பேர் கொண்ட குழுவை நியமித்தது. குழு 1999இல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. தேர்தல்களுக்கு அரசின் நிதியுதவியை அறிமுகப்படுத்துவதற்கான வாதத்தை அது உறுதிப்படுத்தியது.

6. தேர்தல் விதிகள் பற்றிய சட்டக்குழுவின் 170 வது அறிக்கை (1999)

7. அரசியலமைப்பின் செயல்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்கான தேசிய ஆணையம் - 2000-2002 - வெங்கட செல்லையா தலைமையில் குழு அமைப்பு

8. ஆட்சி நெறிமுறைகள் தொடர்பான இரண்டாவது நிர்வாக சீர்திருத்த குழுவின் அறிக்கை - இக்குழுவானது வீரப்பமொய்லியால் தலைமை தாங்கப்பட்டது.

9. டங்கா குழு தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் சீர்திருத்தங்களை முழு வரம்பினை பார்க்க 2010ல் நியமிக்கப்பட்டது.

10. 2013 ஆம் ஆண்டு குற்றவியல் தெரடர்பாக வர்மா குழு அமைக்கப்பட்டது

11. இந்திய சட்ட ஆணையத்தின் 244வது அறிக்கை தேர்தல் தகுதியிழப்பு பற்றி பரிந்துரை 2014.

**1996ம் ஆண்டிக்கு முன் தேர்தல் சீர்திருத்தங்கள்:**

**வயது வந்தோர் வாக்குரிமை – சரத்து 326**

- இந்திய அரசியலமைப்பு மக்களவை மற்றும் மாநில சட்டமன்ற கீழவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதில் வயது வந்தோர் வாக்குரிமை முறையினை பின்பற்றுகின்றது.
- 18 வயதினை நிரம்பிய எந்தொரு இந்திய குடிமகனும் சாதி, மதம், இனம், பாலினம் ஆகிய வேறுபாடின்றி வாக்களிக்க இயலும்.
- வாக்களிக்கும் வயதானது 21 யிலிருந்து 18 ஆக **61 அரசியலமைப்பு சட்டத்திருத்தம், 1988** படி மாற்றப்பட்டது.

**மின்னணு வாக்கு இயந்திரம்**

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), வாக்கு சீட்டுக்கு மாற்றாக தேர்தல் செயல்பாட்டில் முக்கியமாக உள்ளது

- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), தேர்தல் செயல்பாட்டில் முக்கியமாக உள்ளது.
- EVM களை தயாரிக்க இந்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் (ECIL) உடன் இணைந்து மற்றொரு பொதுத்துறை நிறுவனமான டீசுடு உடன் இணைந்து தேர்வு செய்யப்பட்டது

- **1989**ல் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்த மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 நாடாளுமன்றத்தால் திருத்தம் செய்யப்பட்டது

- 1998 முதல் முதலில் சோதனை முறையில் ராஜஸ்தான், மத்தியபிரதேசம் மற்றும் டெல்லி ஆகிய நான்கு மாநிலங்களில் குறிப்பிட்ட 25 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.

- 1999 ல் கோவா மாநிலத்தில் நடைபெற்ற மாநிலதேர்தலில் மாநிலம் முழுவதற்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

- 2004-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் (EVM) நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டது

**தேர்தல் வாக்குபதிவு இயந்திர (EVM) வரலாறு**

- 1977 : CEC S.L ஷக்தர் மின்னணு வாக்கு பதிவு இயந்திர பற்றி கருத்துக்களை தெரிவித்தார்
- 1980-81 மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் ECIL மற்றும் BEL நிறுவனங்களால் உருவாக்கப்பட்டன
- மக்கள் பிரதிநித்துவ சட்டம் 1951 திருத்தப்பட்டு 15.03.1989 முதல் மின்னணு வாக்கு பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது

**வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC)**

- தேர்தல் நடைமுறையை எளிதாக்கும் வகையில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை தேர்தல் ஆணையம் பயன்படுத்துகிறது.
- **1993** ஆம் ஆண்டு நாடு முழுவதும் வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகளை வழங்க தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.

**1996ம் ஆண்டுக்கு பிந்தைய தேர்தல் சீர்திருத்தங்கள்:**

**தேசிய சின்னங்களை அவமதித்தலால் தகுதியிழப்பு**

- **தேசிய நினைவுசின்னங்களை அவமதித்தலால் தகுதியிழப்புச் சட்டம் 1971**
- சட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட காரணத்திற்கான பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலில் 6 வருடம் போட்டியிட தகுதியிழத்தல்.
  - தேசிய கொடியினை அவமதித்தல்
  - இந்திய அரசியமைப்புச் சட்டத்தினை அவமதித்தல்
  - தேசிய கீதத்தினை பாடமறுத்தல்

**நன்கொடை பெறும் கட்சிகள்**

- 2003 ஆம் ஆண்டில் இருந்து அரசியல் கட்சிகள் எந்தவொரு தனி நபரிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ அல்லது அரசு நிறுவனத்திடமிருந்தோ நிதி பெற்று கொள்ளலாம். 20,000-க்கும் அதிகமான பங்களிப்பிற்கான வருமான வரி விலக்கு கோருவதற்கு கட்சிகள் தேர்தல் ஆணையத்திடம் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

**மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களில் பிரெய்லி எழுத்து வடிவம் அறிமுகம் ( Introduction of Braille signage Features in EVMs)**

- தேர்தல் ஆணையம் கண்பார்வைற்றோர்களுக்கான பல்வேறு அமைப்புகளின் பரிந்துரை மற்றும் பிரிதிநித்துவம் அடிப்படையில் மின்னணு வாக்கு எந்திரத்தில் பிரெய்லி எழுத்து முறையை அறிமுகப்படுத்தியது

- 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆந்திரப் பிரதேசத்தின் ஆசிப் நகர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலின் போது EVM களில் பிரெய்லி எழுத்து முறையை அம்சத்தை பரிந்துரையைத்து.

**2010 ம் ஆண்டிற்கு பிறகு தேர்தல் சீர்திருத்தங்கள்:**

**நோட்டா குறியீட்டின் அறிமுகம்**

தேர்தல் ஆணையம் வாக்குச் சீட்டுகள் / மின்னணு வாக்கு இயந்திரங்களில் மேற்சொன்ன எதுவும் இல்லை (NOTA) என்ற விருப்பத்தை வழங்கியுள்ளது, இதனால் வாக்குச் சாவடிக்கு வந்து எந்தவொரு வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று முடிவு செய்யும் வாக்காளர்கள் அத்தகைய வேட்பாளர்களுக்கு வாக்களிக்காமல் இருப்பதற்கான உரிமையைப் பயன்படுத்த முடியும்.

2014ல் பதினாறாவது மக்களவைத் தேர்தலில் நோட்டா முறை பயன்படுத்தப்பட்டது. இது தேர்தல் விதிகள் 1961 இன் நடத்தை **விதி எண். 49(o)** ஐ உறுதி செய்கிறது. இது ”எதிர்மறை வாக்களிப்பு” என்றும் அழைக்கப்படுகிறது.

## VVPAT (Voter Verifiable Paper Audit Trail) அறிமுகம்

வாக்காளர் சரிபார்க்கக்கூடிய காகித தணிக்கை சீட்டு (VVPAT) என்பது EVM உடன் இணைக்கப்பட்ட ஒரு தன்னிச்சையான அமைப்பாகும். இது வாக்காளர்கள் தங்கள் வாக்குகள் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை அறிய உதவுகிறது.

வாக்கு பதிவு செய்யப்பட்டதும், ஒரு சீட்டு அச்சிடப்பட்டு, ஏழு வினாடிகளுக்கு, வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் ஆகியவற்றைக் காட்டும்.

அதன் பிறகு, ரசீது தானாகவே வெட்டப்பட்டு VVPAT இன் சீல் செய்யப்பட்ட டிராப் பாக்ஸில் விழும். இது முதன்முதலில் 2013 இல் நடைபெற்ற நாகாலாந்தின் நோக்சன் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.

வாக்காளர் சரிபார்க்கக்கூடிய தணிக்கைத் தணிக்கை என்பது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட ஒரு சுதந்திர அமைப்பாகும், இது வாக்காளர்கள் தங்கள் வாக்குகள் சரியான நோக்கம் கொண்டதா என சரிபார்க்க அனுமதிக்கிறது.

**தகுதி நீக்கம் செய்தல்**

2013 ஆம் ஆண்டில், முதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் முறையீடு செய்வதற்கு மூன்று மாதங்கள் அவகாசம் வழங்கப்படாமல், அவையில் உறுப்பினர் பதவியில் இருந்து உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று உச்ச நீதிமன்றம் கூறியது

**நன்கொடைகளின் உச்சவரம்பு குறைக்கப்பட்டது**

2017 பட்ஜெட்டில், அரசியல் கட்சிக்கு எந்த ஒரு தனிநபரின் ரொக்க நன்கொடைக்கான வரம்பு 20,000 லிருந்து 2,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது இப்போது அரசியல் கட்சிகள் ரொக்கமாக 2,000 ரூபாய்க்கு மேல் பெற முடியாது.

**தேர்தல் பத்திரங்கள் அறிமுகம்**

அரசியல் நிதியில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதற்காக, அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் பண நன்கொடைகளுக்கு மாற்றாக தேர்தல் பத்திரங்கள் **2018** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

## அரசியல் கட்சிகள்

அரசியல் கட்சி என்பது தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அதிகாரத்தை பிடிப்பதற்காக தன்னார்வத்தோடு ஒன்று கூடும் குழுவாகும். சமூகத்தின் தன்னார்வப் பகுதியிலிருந்து அரசாங்கப் பகுதிக்கு சமூக சிந்தனையின் செயல்முறையைக் கொண்டு செல்லும் வழித்தடங்களுடன் பார்கர் அரசியல் கட்சிகளை ஒப்பிடுகிறார்.

**கட்சி முறைகளின் வகைகள்**

1. ஒரு கட்சி முறை: ஒரே ஒரு ஆளும் கட்சி மட்டுமே பங்கு பெறுவது. இதில் எதிர்கட்சிக்கு அனுமதி இல்லை எ.கா: சீனா, கியூபா, முன்னாள் USSR.

2. இரு கட்சி முறை: இரண்டு பெரிய கட்சிகள் மட்டுமே பங்கு பெறுவது. எ.கா: அமெரிக்கா, இங்கிலாந்து

3. பல கட்சி முறை: இரண்டுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் பங்கு பெறுவது. எ.கா: இந்தியா, பிரான்ஸ்.

**தேசிய மற்றும் மாநில கட்சிகளின் அங்கீகாரம்**

தேர்தல் ஆணையமானது, தேர்தல் நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை அவற்றின் தேர்தல் செயல்பாட்டின் அடிப்படையில் தேசிய அல்லது மாநிலக் கட்சிகளாக அங்கீகாரம் அளிக்கிறது.

கட்சி சின்னங்களை ஒதுக்கீடு செய்தல், அரசுக்கு சொந்தமான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களில் அரசியல் பரப்புரைக்கான நேரம் மற்றும் வாக்காளர் பட்டியலுக்கான உரிமை போன்ற சில சலுகைகள் தேர்தல் ஆணையம் வழங்கும் அங்கீகாரத்தின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தேசிய கட்சிக்கும் நாடு முழுவதும் அதன் பயன்பாட்டிற்காக தனித்துவமான ஒரு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஒவ்வொரு மாநிலக் கட்சிக்கும் அது அங்கீகரிக்கப்பட்ட மாநிலம் அல்லது மாநிலங்களில் அதன் பயன்பாட்டிற்காக பிரத்தியேகமாக ஒரு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு பதிவு செய்யப்பட்ட - அங்கீகரிக்கப்படாத கட்சி, தேர்தல் ஆணையத்தின் சின்னங்களின் பட்டியலிலிருந்து ஒரு சின்னத்தைத் தேர்ந்தெடுக்கலாம். வெவ்வேறு மாநிலங்களில் உள்ள வெவ்வேறு மாநிலக் கட்சிகள் ஒரே சின்னத்தைப் பயன்படுத்தலாம். எ.கா: மகாரா'ிடிராவில் **சிவசேனா** மற்றும் ஜார்க்கண்டில் ஜார்கண்ட் **முக்தி மோஷா** ஆகிய கட்சிகள் வில் மற்றும் அம்பை தங்கள் சின்னமாக பயன்படுத்துகின்றன.

**தேசியக் கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகள்**

பின்வரும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டால், ஒரு கட்சி தேசியக் கட்சியாக அங்கீகரிக்கப்படும்

1. மக்களவை அல்லது  மாநில சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலில் ஏதேனும் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் செல்லத்தகுந்த வாக்குகளில் **ஆறு சதவீதத்தை** பெறுதல் மற்றும் பல மாநிலங்களில் இருந்து மக்களவையில் நான்கு இடங்களை பெறுதல்

அல்லது

2. மக்களவை பொதுத் தேர்தலில் குறைந்தபட்சம் மூன்று மாநிலங்களில் இருந்து **இரண்டு சதவீத** இடங்களை வெல்லுதல்

அல்லது

3. நான்கு மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படுதல்.

## மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனைகள்

பின்வரும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டால், ஒரு மாநிலத்தில் உள்ள ஒரு கட்சி மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்படும்

1. மாநிலத்தின் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலில் செல்லத்தகுந்த வாக்குகளில் **ஆறு சதவீதத்தைப்** பெறுதல் மற்றும் அந்த மாநிலத்தின் சட்டமன்றத்தில் 2 இடங்களைப் பெறுதல்

அல்லது

2. மக்களவைபொதுத் தேர்தலில் அம்மாநிலத்திலிருந்து செல்லத்தகுந்த வாக்குகளில் ஆறு சதவீதத்தைப் பெறுதல் மற்றும் அம்மாநிலத்திலிருந்து மக்களவையில் 1 இடத்தைப் பெறுதல்

அல்லது

3. மாநிலத்தின் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலில் சட்டப் பேரவையில் மூன்று சதவீத இடங்களைப் பெறுதல் அல்லது சட்டமன்றத்தில் 3 இடங்களைப் பெறுதல்

அல்லது

4. மக்களவையில் அம்மாநிலத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு 25 இடங்களுக்கும் 1 இடத்தில் வெற்றி பெறுதல்

அல்லது

5. அம்மாநிலத்தின் மக்களவை தேர்தலிலோ அல்லது மாநிலத்தின் சட்டமன்ற பொதுத் தேர்தலிலோ செல்லத்தகுந்த வாக்குகளில் எட்டு சதவீதத்தை பெறுதல். இந்த நிபந்தனை 2011 இல் சேர்க்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகள்




1. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) (சின்னம்: இரட்டை இலை)

2. திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) (சின்னம்: உதய சூரியன்)



APOLLO STUDY CENTRE

## தற்போதைய நிலவரப்படி அங்கீரிக்கப்பட்ட தேசிய கட்சிகள்

| **Party** | **Election Symbol** | **Political Position** | **Ideology** | **Founded** | **Leader** |
|---|---|---|---|---|---|
| Aam Aadmi Party | Broom  | Centre | Populism Secularism Composite Nationalism Socialism | November 2012 (11 years ago) | Arvind Kejriwal |
| Bahujan samaj party | Elephant  | Centre left | Ambedkarism social equality | April 1984 (39 years ago) | Mayawati |
| Bharatiya Janata Party | Lotus  | Right wing | Hindutva Nationalism Right-wing Conservatism | April 1980 (43 years ago) | J.P. Nadda |
| Communist Party of India (Marxist) | Hammer, Sickle and Star  | Left wing | Marxism Secularism Anti-capitalism Socialism | November 1964 (59 years ago) | Sitaram Yechury |
| Indian National Congress | Hand  | Centre to centre-left | Big tent Secularism Social liberalism Civic nationalism Social democracy | December 1885 (137 years ago) | Mallikarjun Kharge |
| National People's Party | Book  | Centre right | Regionalism ethnocentrism | January 2013 (10 years ago) | Conrad Sangma |

**Formation of Political Parties (Chronological Order)**

| **SI. NO** | **Name of the Party (Abbreviation)** | **Founder** | **Year of Formation** |
|---|---|---|---|
| 1 | Indian National Congress (INC) | A.O. Hume | 1885 |
| 2 | Shiromani Akali Dal (SAD) | | 1920 |

| | | | |
|---|---|---|---|
| 3 | Communist Party of India (CPI) | M.N. Roy | 1925 |
| 4 | Jammu & Kashmir National Conference (JKNC) | Sheikh Abdullah | 1939 |
| 5 | Dravida Munnetra Kazhagam (DMK) | C.N. Annadurai | 1949 |
| 6 | Communist Party of India (Marxist) (CPM) | | 1964 |
| 7 | Shiv Sena (SHS) | Bal Thackeray | 1966 |
| 8 | All India Anna Dravida Munnetra Kazhangam (AIADMK) | M.G. Ramachandran | 1972 |
| 9 | Bharatiya Janata Party (BJP) | A.B. Vajpayee and L.K. Advani | 1980 |
| 10 | Telugu Desam Party (TDP) | N.T. Rama Rao | 1982 |
| 11 | Bahujan Samaj Party (BSP) | Kanshi Ram | 1984 |
| 12 | Asom Gana Parishad (AGP) | P.K. Mahanta | 1985 |
| 13 | Samajwadi Party (SP) | Mulayam Singh Yadav | 1992 |
| 14 | Rashtriya Janata Dal (RJD) | Lalu Prasad Yadav | 1997 |
| 15 | Biju Janata Dal (BJD) | Naveen Patnaik | 1997 |
| 16 | All India Trinamool Congress (AITC) | Mamata Banerjee | 1998 |
| 17 | Jammu and Kashmir People's Democratic Party (PDP) | Mufti Mohd. Sayeed | 1999 |
| 18 | Janata Dal (United) (JD (U)) | Sharad Yadav | 1999 |
| 19 | Janata Dal (Secular) (JD(S)) | H.D. Deve Gowda | 1999 |
| 20 | National Congress Party (NCP) | Sharad Pawar, P.A. Sangma and Tariq Anwar | 1999 |
| 21 | Lok Janshakti Party (LJP) | Ram Vilas Paswan | 2000 |
| 22 | Telengana Rashtra Samithi (TRS) | K. Chandra Shekar Rao | 2001 |
| 23 | Yuvajana Sramika Rythu Congress Party(YSRCP) | Y.S. Jagan Mohan Reddy | 2011 |
| 24 | Aam Aadmi Party (AAP) | Arvind Kejriwal | 2012 |
| 25 | National People's Party (NPP) | P.A. Sangma | 2013 |



**Recognised State Parties**

| **Party** | **Election Symbol** | **Political Position** | **Ideology** | **Founded** | **Leader** |
|---|---|---|---|---|---|
| All India | Flower | Centre to | Bengali | 1998 | Mamata |


 **PH: 24339436, 42867555, 9840226187**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Trinamool Congress | and grass | centre-left | nationalism<br>Progressivism<br>Welfarism<br>Secularism<br>Populism | | Banerjee |
| Communist Party of India | Ears of Corn and Sickle | Left-wing | Communism<br>Marxism–Leninism<br>Anti-capitalism<br>Socialism<br>Secularism | 1925 | D. Raja |
| Janata Dal (Secular) | Female farmer | Centre-left to left -wing | Secularism | 1999 | H. D. Deve Gowda |
| Janata Dal (United) | Arrow | Centre-left | Socialism<br>Secularism<br>Integral humanism | 2003 | Nitish Kumar |
| Lok Janshakti Party (Ram Vilas) | Helicopter | | | 2021 | Chirag Paswan |
| Naga People's Front | Cock | | Regionalism | 2002 | Kuzholuzo Nienu |
| Rashtriya Janata Dal | Hurricane Lamp | Centre-left | Socialism | 1997 | Lalu Prasad Yadav<br>Tejashwi Yadav |
| Telegu Desam Party | Cycle | Centre to centre - right | Populism<br>Economic liberalism | 1982 | N. Chandrababu Naidu |
| All India Forward | Lion | Left-wing | Left-wing nationalism | 1939 | Debabrata Biswas |





APOLLO STUDY CENTRE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bloc |  | | Socialism Anti-imperialism Marxism | | |
| All Jharkhand Students Union | Banana  | | | 1986 | Sudesh Mahto |
| Asom Gana Parishad | Elephant  | Centre-right | Regionalism Anti-Bengali sentiment | 1985 | Atul Bora |
| Bharat Rashtra Samithi | Car  | Centre | Regionalism Populism Conservatism Separatism | 2001 | K. Chandra shekar Rao |
| Biju Janata Dal | Conch  | Centre-left | Regionalism Populism Secularism Liberalism Economic nationalism | 1997 | Naveen Patnaik |
| Bodoland People's Front | Nangol  | | Secularism Democratic socialism | 2005 | Hagrama Mohilary |
| Communist Party of India (Marxist–Leninist) Liberation | Flag with three stars  | Far-left | Communism Marxism–Leninism Maoism | 1974 | Dipankar Bhattacharya |
| Indian National Lok Dal | Spectacles  | Centre | Social liberalism Regionalism | 1996 | Om Prakash Chautala |
| Indian Union Muslim League | Ladder  | Centre-right | Muslim interests Social conservatism | 1948 | Hyderali Shihab Thangal |
| Jammu & | Plough | | Kashmiriyat | 1932 | Farooq |



APOLLO STUDY CENTRE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Kashmir National Conference |  | | Kashmiri auto nomy Secularism | | Abdullah |
| Jammu and Kashmir National Panthers Party | Bicycle  | | Democracy Anti-corruption Secularism Women's rights | 1982 | Bhim Singh |
| Jammu and Kashmir Peoples Democratic Party | Ink pot and Pen  | | Kashmiriyat Kashmiri auto nomy Regionalism | 1999 | Mehbooba Mufti |
| Jharkhand Mukti Morcha | Bow and arrow  | | | 1972 | Shibu Soren Hemant Soren |
| Maharashtra Navnirman Sena | Railway Engine  | Far-right | Hindutva Right-wing populism Regionalism Ultranationali sm Marathi interests | 2006 | Raj Thackeray |
| Mizo National Front | Star  | | | 1961 | Zoramthanga |
| People's Party of Arunachal | Maize  | | Regionalism | 1977 | Kamen Ringu |
| Rashtriya Lok Janshakti | Sewing Machine | | | 2021 | Pashupati Kumar Paras |

APOLLO STUDY CENTRE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Party |  | | | | |
| Rashtriya Loktantrik Party | Water bottle  | | | 2018 | Hanuman Beniwal |
| Revolutionary Socialist Party | Spade and Stoker  | Far-left | Communism Marxism–Leninism Revolutionary socialism | 1940 | Manoj Bhattacharya |
| Samajwadi Party | Bicycle  | Centre-left to left | Social democracy Democratic socialism Left-wing populism Social conservatism | 1992 | Akhilesh Yadav |
| Shiromani Akali Dal | Weighing balance  | Centre-right | Punjabiyat Conservatism Federalism | 1920 | Sukhbir Singh Badal |
| Sikkim Democratic Front | Umbrella  | Centre-left to left-wing | Democratic socialism | 1993 | Pawan Kumar Chamling |
| Shiv Sena | Bow and arrow  | Right-wing to Far-right | Nationalism Hindutva Hindu Nationalism Marathi Regionalism Social | 1966 | Eknath Shinde |

APOLLO STUDY CENTRE

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | Conservatism Conservatism Ultranationalism Economic Nationalism Right-wing Populism | | |
| Shiv Sena (Uddhav Balasaheb Thackeray) | Flaming torch  | Centre-right to right-wing | Secular Hindutva Nationalism Marathi Regionalism Composite Nationalism | 2022 | Uddhav Thackeray |
| YSR Congress Party | Ceiling fan  | Centre-left | Populism Regionalism | 2011 | Y. S. Jagan Mohan Reddy |

**Original Questions**

Match the following:

| Name of the party | Symbol |
|---|---|
| A. Janata Dal (JD (U)) | 1. Plough |
| B. Jharkhand Mukti Morcha (JMM) | 2. Ladder |
| C. Indian Union Muslim League | 3. Bow and Arrow |
| D. Jammu & Kashmir National Conference | 4. Arrow |

கீழ்கண்டவற்றை பொருத்துக:

| கட்சியின் பெயர் | சின்னம் |
|---|---|
| A. ஜனதா தலம் (U) | 1. ஏர்கலப்பை |
| B. ஜார்கண்ட் முக்தி மோர்சா (JMM) | 2. ஏணிப்படி |
| C. இந்திய யூனியன் முஸ்லீம் லீக் | 3. வில்லும் அம்பும் |
| D. ஜம்மு காஷ்மீர் மாநாட்டு கட்சி | 4. அம்பு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

How many pairs are correctly matched?

| Party | symbol |
|---|---|
| 1. All India Trinamool Congress | - Two Flowers and Grass |
| 2. Nationalist Congress Party | - Clock |
| 3. Telangana Rashtra Samiti | - Car |
| 4. Asom Gana Parishad | - Lock and Key |

a. 1 pair b. 2 pairs **c. 3 pairs**
d. 4 pairs e. Answer not known

கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணைகள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளன?

| கட்சி | சின்னம் |
|---|---|
| 1. அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் | - இரு பூக்கள் மற்றும் புற்கள் |
| 2. தேசியவாத காங்கிரஸ் கட்சி | - கடிகாரம் |
| 3. தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி | - கார் |
| 4. அஸாம் கண பரிஷத் | - பூட்டு மற்றும் சாவி |

a. 1 இணை b. 2 இணைகள் c. 3 இணைகள்
d. 4 இணைகள் e. விடை தெரியவில்லை‘

## கூட்டணி அரசாங்கம்

### பொருள்

- “கூட்டணி“ என்ற சொல் லத்தீன் வார்த்தையான “கோலிட்டியோ-“ என்பதிலிருந்து உருவானது, அதாவது இதன் பொருள் “ஒன்றாக வளர்வது“.
- பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு அரசாங்கத்தை உருவாக்கி, ஒரு பொதுவான திட்டம்/கொள்கையின் அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, அந்த அமைப்பை நாம் கூட்டணி அரசியல் அல்லது கூட்டணி அரசாங்கம் என்று விவரிக்கலாம்.

### உருவாக்கம்

- முதல் நான்கு மக்களவைத் தேர்தல்களில் (1952, 1957, 1962 மற்றும் 1967) காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையைப் பெற்றது.
- ஆனால், 1977 தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. அதன்பிறகு, மத்தியில் பல கூட்டணி அரசுகள் உருவாகின

| SI. No | Period | Coalition | Prime Minister (Party) | Partners |
|---|---|---|---|---|
| 1 | 1977-1979 | Janata Party | Morarji Desai (Congress (O)) | Congress (O), Bharatiya Jana Sangh, Bharatiya Lok Dal, Socialist Party, Congress for Democracy, Chandra Shekhar Group (former Congressmen) and others. |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 1989-1990 | National Front | V.P. Singh (Janata Dal) | Janata Dal, TDP, DMK, AGP and Congress (Socialist) BJP and Left parties supported from outside. |
| 3 | 1999-2004 | National Democratic Alliance (NDA) | A.B. Vaypayee (BJP) | BJP, JD (U), Trinamool Congress, Shiv Sena, BJD, LJP, DMK, PMK, INLD, MDMK, National Conference, Akali Dal, RLD, AGP and others. |
| 4 | 2004-2009 | United Progressive Alliance (UPA) | Manmohan Singh (Congress) | Congress, NCP, DMK, RJD, LJP, PMK, and others. CPI and CPM supported from outside. |
| 5 | 2009-2014 | United Progressive Alliance (UPA-II) | Manmohan Singh (Congress) | Congress, NCP, DMK, Trinamool Congress, National Conference and others. |
| 6 | 2014-2019 | National Democratic Alliance (NDA) | Narendra Modi (BJP) | BJP, LJP, TDP, Shiv Sena, Akali Dal, Rashtriya Lok Samata Party, Apna Dal (S) and others. TDP left NDA in 2018. |
| 7 | 2019-till date | National Democratic Alliance (NDA) | Narendra Modi (BJP) | BJP, Akali Dal, LJP, Shiv Sena and others. Shiv Sena left NDA in 2019 and Akali Dal in 2020. |

## கட்சித் தாவல் தடை சட்டம் (Anti Defection Law)

- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சியிலிருந்து மற்றோரு கட்சிக்கு தாவுவதைத் தடுப்பதற்காக 1985 ஆம் ஆண்டு 52 வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது

**91வது சட்டதிருத்தம் 2003**

- மத்திய அமைச்சர் குழுவில் (Council of Ministers) உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை பிரதமரையும் சேர்த்து 15 % மேல் இருத்தல் கூடாது (சரத்து 75)
- கட்சித்தாவல் தடை சட்டத்தின்கீழ் தகுதி நீக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் பதவியை வகிப்பதற்க்குத் தகுதியற்றவர்

- மாநில அமைச்சர் குழுவில் அமைச்சர்களின் எண்ணிக்கை முதலமைச்சரையும் சேர்த்து பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் 15 % மேல் இருக்க கூடாது அதே போல் 12 அமைச்சர்களுக்குக் குறைவாகவும் இருக்ககூடாது (சரத்து -164))
- தகுதிநீக்கம் செய்யப்பட்ட பேரவை அல்லது மேலவை உறுப்பினர் அமைச்சராகத் தொடரவதற்கு தகுதியற்றவர்
- கட்சிதாவல் தடைச்சட்டத்தின்கீழ் தகுதி நிக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள், பொது பணத்திலிருந்து ஊதியம் பெறும் அரசு பதவிகளை வகிக்க இயலாது
- ஒரு கட்சியிலருந்து மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் விலகினால் அவர்களுக்குக் கட்சித் தாவல் தடை சட்டம் பாதுகாப்பு வழங்காது.

## அழுத்தக்குழுக்கள் (Pressure group)

- அழுத்தக்குழு என்ற சொல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து உருவாக்கப்பட்டது
- மக்கள் தங்களது பொது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்படும் குழுக்கள் தனிப்பட்ட நலக் குழுக்கள் ஆகும்

### இந்தியாவில் அழுத்தக்குழுக்கள் ( Pressure Groups of India)

1. **வணிகக் குழுக்கள் (Business Groups)**

❖ வணிக அல்லது வர்த்தகக் குழுக்கள் அதிக எண்ணிக்யையில் உள்ளன இவை தன்னலக் குழுக்களில் மிகவுதம் சக்தி வாய்ந்த குழுக்கள்

எ. கா

- எப்.ஐ.சி.சி.ஐ (FICCI - Federation of India chamber of commerce industry
- அசோசம் (ASSOCHAM – Associated chamber of Commerce and Industry )

2. **வர்த்தகச் சங்கங்கள் (Trade Union)**

- தொழிலாளர்களின் நலத்திற்க்காக செயல்படும் குழுக்கள் இந்தியாவில் இக்குழுக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் கட்சிகளுடன் தொடர்பில் உள்ளன

எ. கா.

ஏ.ஐ.டி.யு.சி (AITUC – All India Trade Union Congress)

ஐ.என்.டியு.சி (INTUC – Indian National Trade Union Congress)

## 3. விவசாயக் குழுக்கள் (Agrarian Groups)

விவசாயிகள் மற்றும் விவாசயத் தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்காகப் போராடுகிறது

எ. கா.

- பாரதிய கிசான் சங் (Bharatiya Kisan Union)
- அகில இந்திய கிசான் சபா (All Indian Kisan Shabha)

## 4. மாணவர் சங்கங்கள் (Student Organisation)

மாணவர்களின் நலன்களுக்கான இக்குழுக்கள் செயல்படுகின்றன

எ. கா

- அகில பாரதிய விதயாரத்தி பரசித் (ABVP)
- அகில இந்திய மாணவர்களின் கூட்டமைப்பு (AISF)

## 5. மதக் கூட்டமைப்புகள் ( Religious Organisations)

இக்குழுக்கள் தங்களின் மதங்களை முன்நிறுத்துகின்றன

எ. கா

- இராஷ்டிரிய சுவயம் சேவாக் சங் (RSS)
- ஜமாத் இ இஸ்லாம்
- விஸ்வ இந்து பரிசத்

## 6. சாதியக் குழுக்கள் (Caste Group)

இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கின்றன இக்குழுக்கள் அடிப்படையில் போட்டி அரசியலே நடைபெறுகிறது

எ.கா

- குறிப்பிட்ட சில சாதி சங்கங்கள்

## 7. பழங்குடி அமைப்புகள்

இவற்றின் கோரிக்கைகள் சீர்திருத்தங்கள் தொடங்கி பிரிவினைவாதம் வரை உள்ளது

- National Socialist Council of Nagaland (NSCN)

## 8. மொழிவாரிக் குழுக்கள் (Linguistic Group)

இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கின்றன இதன் அடிப்படையில் தான் மொழிவாரி மாநிலங்கள் உருவாயின.

எ. கா

- தமிழ் சங்கம்

- ஆந்திர மகாச் சபை

## 9. கொள்கைரீதியிலான குழுக்கள் ( Ideology Based Groups )

கொள்கை அடிப்படையில் இக்குழுக்கள் உருவாகின்றன

எ. கா

- சிப்கோ இயக்கம்
- நர்மதா பச்சோ அந்தோலன்
- ஜனநாயக உரிமைகள் அமைப்புகள்

## 10. நெறியற்ற குழுக்கள்

- இக்குழுக்கள் நெறியற்ற முறையில் தங்கள் கோரிக்கைகளை அடையபடுத்த முயற்ச்சிக்கின்றன
- அரசியல் நிர்வாகம் போன்ற காரணங்களினால் விரக்தி மனநிலையில் இருப்பவர்கள் திடீரென இக்குழுக்களை உருவாக்குகின்றனர்

எ. கா

- நக்சலைட் குழுக்கள்
- ஜம்மு மற்றும் காஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF)

APPOLO STUDY CENTRE